**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி**

முன்னிலை: திருமதி.ஜி.அபர்ணா,M.A.,L.LM., B.Sc.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,சிங்கம்புணரி.
2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21 ம் நாள் செவ்வாய் கிழமை
(2057 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் சித்திரை திங்கள் 8 ம் நாள்)

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்:135/2019**
**CNR No:TNSV160004042019**

அரசுக்காக:
காவல் ஆய்வாளர்
எஸ்.வி.மங்கலம் காவல் நிலையம்,
குற்ற எண்:57/2013 -- குற்ற முறையீட்டாளர்

/ எதிர் /

சுரேஷ் (வயது 35/15)
த/பெ.முத்துக்குமார்,
1/556, காமராஜ் நகர்,
கண்ணார்பாளையம்,
காரமடை,
கோயம்புத்தூர். -- குற்றம்சாட்டப்பட்டவர்

**வழக்கின் சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | குற்றம்சாட்டப்பட்டவர் காவல் அடைப்பிற்கு உட்படுத்திய காலம் | இல்லை |
| 2. | நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 28.04.2015 |
| 3. | இவ்வழக்கு கோப்பினை அமர்வு நீதிமன்றத்திற்கு மேல்விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | இல்லை |
| 4. | குற்றம்சாட்டப்பட்டவரிடம் கு.வி.மு.ச பிரிவு 240-ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து வினவப்பட்டு குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | 28.09.2022 |
| 5. | குற்றவியல் பல்வகை மனு தாக்கல் செய்த விவரமும் அதன் முடிவும் (கு.வி.மு.ச.பிரிவு 317 மனு தவிர) | 311 சிஆர்.பி.சி கீழான மனு: சிஆர்.எம்.பி.எண்:04/2025 – 21.04.2025 அனுமதிக்கப்பட்டது. |

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.21 17:29:07 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | அரசு தரப்பு சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அரசு தரப்பு சாட்சிகள் | முதல் விசாரணை செய்த நாள் | குறுக்கு விசாரணை செய்த நாள் |
| | | அ.சா.1 | 22.02.2023 | 11.06.2025 |
| | | அ.சா.2 | 25.06.2025 | 25.06.2025 |
| | | அ.சா.3 | 25.06.2025 | 25.06.2025 |
| | | அ.சா.4 | 25.06.2025 | 25.06.2025 |
| | | அ.சா.5 | 11.02.2026 | 11.02.2026 |
| | | அ.சா.6 | 26.03.2026 | 26.03.2026 |
| 7. | கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ) ன் படி குற்றம்சாட்டப்பட்டவரிடம் வினாக்கள் வினவப்பட்ட நாள் | 01.04.2026 | | |
| 8. | குற்றம்சாட்டப்பட்டவர் தலைமறைவான விவரம் மற்றும் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜரான விவரம் மற்றும் ஆஜர்படுத்தப்பட்ட விவரம் | எதிரியின் அட்வான்ஸ் மனு: சிஆர்.எம்.பி. எண்:01 – நாள்:17.04.2025 அனுமதிக்கப்பட்டது.<br>எதிரியின் சரண்டர் மனு: சிஆர்.எம்.பி. எண்:02 – நாள்:17.04.2025 அனுமதிக்கப்பட்டது.<br>எதிரியின் ரீகால் மனு: சிஆர்.எம்.பி. எண்:03 – நாள்:17.04.2025 அனுமதிக்கப்பட்டது.<br>எதிரியின் நிபந்தனை தளர்வு கோரும் மனு: சிஆர்.எம்.பி. எண்:03 – நாள்:21.04.2025 அனுமதிக்கப்பட்டது. | | |
| 9. | மேல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தடை உத்தரவு குறித்த விவரம் | இல்லை | | |

அசல் வழக்கானது ஆண்டு பட்டிகை வழக்கு எண்:91/2015 என திருப்பத்தூர், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, சிவகங்கை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மாண்புமிகு

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.21 17:29:15 +0530

சென்னை உயர்நீதிமன்றம் ROC.50317/2018 நாள்:18.10.2019–ன் படி கடித எண்:7348/2019 நாள்:24.10.2019 ன் படி இந்நீதிமன்றத்திற்கு 21.11.2019 அன்று மாற்றம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை வழக்கு எண்:135/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 09.04.2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்த போது அரசுத்தரப்பில் அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.நாகேஷ்பிரபு அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களைக் கேட்டும் ஆவணங்களை பார்வையிட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்புரை**

1. எஸ்.வி.மங்களம் காவல் நிலைய ஆய்வாளர் குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவு 304A ன் கீழ் குற்றம் புரிந்ததாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

2(1).இவ்வழக்கில் கடந்த 12.05.2013 ம் தேதி மதியம் சுமார் 15.00 மணிக்கு செந்தில்குமார் என்பவர் TN–63–L–4942 Bajaj Pulsor இருசக்கர வாகனத்தில் சிங்கம்புணரியிலிருந்து திருப்பத்தூருக்கு கிழக்கு நோக்கி சிலநீர்பட்டி பாலம் அருகே சென்ற போது எதிரி மேற்கு நோக்கி TN–38–AM–7548 என்ற வேனை அதிகவேகமாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் செந்தில்குமாருக்கு வலது காலில் முறிவு ஏற்பட்டு சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லும் வழியில் இறப்பை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளதாக எஸ்.வி.மங்களம் காவல் நிலைய ஆய்வாளர் குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவு 304A ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. புலன்விசாரணை அதிகாரி தாக்கல் செய்த இறுதி அறிக்கையை கோப்பிற்கு எடுத்த இந்த நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்டவரின் குற்றச்செயல்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.21 17:29:22 +0530

குறித்து அடிப்படை முகாந்திரம் இருப்பதாக கருதியதால் குற்றம்சாட்டப்பட்டவருக்கு அழைப்பாணை அனுப்பியது. அழைப்பாணையின் பேரில் குற்றம்சாட்டப்பட்டவர் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகினார் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன.

4.குற்றம்சாட்டப்பட்டவருக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு, குற்றம்சாட்டப்பட்டவரிடம் குற்றம் குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. எதிரியின் கருத்தும் கேட்கப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து அடிப்படை முகாந்திரம் இருந்த காரணத்தால் குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவு 304A ன் கீழான குற்றம் குறித்து வாசித்து விளக்கி கூறி வினவப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர் தன் மீதான குற்றத்தை மறுத்தார். எனவே, அரசு தரப்புச் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்று பொருட்கள் எதுவும் முன்னிலைப் படுத்தப்படவில்லை.

6. **<u>அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சாட்சியம் மற்றும் ஆவணங்களிலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விவர சுருக்கம் பின்வருமாறு:</u>–**

6(1). அ.சா.1 சேதுராமன் சம்பவத்தை கண்ணுற்ற நபர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் கடந்த 12.05.2013 அன்று தனது மகன் செந்தில்குமார் வேலை முடித்து விட்டு மதியம் 3 மணிக்கு பல்சர் இருசக்கர வாகனத்தில் சிங்கம்புணரியிலிருந்து கிளம்பி கிழக்கு வழியாக சம்பவ சாலையில் திருகளாப்பட்டி அருகில் உள்ள ஸ்டேசனில் உள்ள தங்கள் வீட்டிற்கு இருவரும் தனிதனியாக இருசக்கர வாகனங்களில் சென்று கொண்டிருந்ததாகவும்,

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.04.21 17:29:29 +0530

சிலநீர்பட்டி விலக்கு அருகே தனது மகன் இருசக்கர வாகனத்தில் முன்னால் சென்று கொண்டிருந்த போது தான் பின்னால் சென்று கொண்டிருந்தேன் என்றும் திருப்பத்தூர் – சிங்கம்புணரி சாலையில் வந்த வேன் அதிகவேகமாகவும் வந்து தனது மகன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது என்றும் தான் விபத்தை நேரடியாக பார்த்தேன் என்றும் பின்னர் 108 ஆம்புலன்சில் சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பியதாகவும், பதட்டத்தில் ஓட்டுனரை பார்க்கவில்லை என்றும் பின்னர் அன்றையதினம் மாலை 5 மணியளவில் அ.த.சா.ஆ.1 புகார் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6(2) அ.சா.2 சண்முகம், அ.சா.3 பெரியசாமி சம்பவத்தை கண்ணுற்ற நபர்களாவர். இவர்கள் தங்களது சாட்சியத்தில் செந்தில்குமார் என்பவருக்கு விபத்தில் காயம் ஏற்பட்டு இறப்பு ஏற்பட்ட நிகழ்வினை தாங்கள் கண்ணுற்றது குறித்து சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.4 கார்த்திகேயன் பார்வை மகஜர் சாட்சியாவார். இவர் தனது சாட்சியத்தில் தான் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

6(3) அ.சா.5 முகமது தாரிக்குல் அமீன் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் கடந்த 12.05.2013 ம் தேதி 17.00 மணிக்கு எஸ்.வி.மங்களம் காவல்நிலைய பொறுப்பில் இருந்த போது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று நிலைய குற்ற எண்:57/2013 இதச பிரிவு 304A–ன் கீழ் அ.த.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

6(4). அ.சா.6 சசிகலா காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் 12.05.2013 ம் தேதி இவ்வழக்கை தனது விசாரணைக்கு எடுத்து கொண்டு 18 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கார்த்திகேயன் மற்றும் ராமநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.த.சா.ஆ.4 பார்வை மகஜர்மற்றும் அ.த.சா.ஆ.5 மாதிரி வரைபடம தயார் செய்து 1 முதல் 7 பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து 13.05.2013 ம் தேதி 8 –10 மணிக்கு பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு அ.த.சா.ஆ 6 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து, பிரேத பரிசோதனை

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.21 17:29:38 +0530

செய்த மருத்துவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அ.த.சா.ஆ 7 பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று, விபத்தில் ஈடுபட்ட வாகனங்களை ஆய்விற்கு அனுப்பி மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அ.த.சா.ஆ.8, அ.த.சா.ஆ−9 மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று தலைமை காவலர் சேகர் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து பின்னர் இவ்வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

7.அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தபட்ட சாட்சிகளின் சாட்சியத்தில் குற்றம்சாட்டப்பட்டவருக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து குற்றம்சாட்டப்பட்டவரிடம் விளக்கிக் கூறி கு.வி.மு.ச. பிரிவு 313 (1)(b)−ன் கீழ் வினவிய போது, குற்றம்சாட்டப்பட்டவர் அவை அனைத்தும் பொய்யென்றும், அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கென்று மறுத்தார். குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என தெரிவிக்கப்பட்டது.

8. பின்னிட்டு இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன.

9. அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளில் அ.சா.1 முதல் அ.சா.3 சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாவர் என்றும், அவர்களது வாய்மொழி சாட்சியத்தின் மூலம் எதிரிக்கு எதிரான குற்றத்தை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்துள்ளது என்றும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

10.எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது அ.சா.1 முதல் அ.சா.3 ன் சாட்சியம் நம்பிக்கைக்குரியதாக இல்லை என்றும், அரசு தரப்பு எதிரிக்கு எதிரான குற்றத்தை நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்றும், இழப்பீடு பெறுவதற்காக இந்த எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கே ஜோடிக்கப்பட்ட ஒரு பொய் வழக்கு என்றும், எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதம் எடுத்துரைத்தார்.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.21 17:29:44 +0530

11.**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u>**:-

(அ). குற்றம்சாட்டப்பட்டவர் மீது இதச பிரிவு 304A ன் கீழ் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளதா?

(ஆ).ஆம் எனில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்க வேண்டிய தண்டனை என்ன என்பதேயாகும்.

**<u>12 .பரிசீலனையும் தீர்வும்:-</u>**

12(1). கடந்த 12.05.2013 ம் தேதி மதியம் சுமார் 15.00 மணிக்கு செந்தில்குமார் என்பவர் TN-63-L-4942 Bajaj Pulsor இருசக்கர வாகனத்தில் சிங்கம்புணரியிலிருந்து திருப்பத்தூருக்கு கிழக்கு நோக்கி சிலநீர்பட்டி பாலம் அருகே சென்ற போது எதிரி மேற்கு நோக்கி TN-38-AM-7548 என்ற வேனை அதிகவேகமாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் செந்தில்குமாருக்கு வலது காலில் முறிவு ஏற்பட்டு சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லும் வழியில் இறப்பை ஏற்படுத்தி இதச பிரிவு 304A ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ளது.

12(2). இவ்வழக்கு விபத்து வழக்கு என்பதால் இதச பிரிவு 304A ன் கீழான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்வதற்கு அரசு தரப்பில் எதிரி தான் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டினார் என்பதையும், விபத்தானது எதிரியின் கவனக்குறைவான மற்றும் அசட்டையான செயலால் ஏற்பட்டது என்பதையும், மேற்படி விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் விபத்தில் இறந்துபோனவரின் இறப்பிற்கு நேரடி மற்றும் உடனடி காரணமாக அமைந்தது என்பதையும் நிரூபணம் செய்ய வேண்டும். மேற்படி ஆக்கக்கூறுகள் இவ்வழக்கில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலிக்கையில்,

12(3). இவ்வழக்கில் சம்பவம் குறித்து அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்கள் சம்பவ சாட்சி என்றும் இறந்த செந்தில்குமார் விபத்து ஏற்பட்ட போது சம்பவ இடத்தில் இருந்தனர் என்று

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.21 17:29:52 +0530

சொல்லப்படுகிறது. அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்களின் வாய்மொழி சாட்சியத்தின் மூலம் விபத்தானது எதிரியின் கவனக்குறைவினாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது என்பதை அரசு தரப்பு நிரூபணம் செய்துள்ளதா? என்பதை பரிசீலிக்க வேண்டியதாக உள்ளது.

12(4). அ.சா.1 தனது புகாரில் 12.05.2013 ம் தேதி நானும், எனது மூத்த மகன் செந்தில்குமாரும் சிங்கம்புணரி வந்து ஓரியண்டல் வங்கியில் வேலையை முடித்துவிட்டு நான் டி.என்.63–E–3045 என்ற வாகனத்திலும், எனது மகன் செந்தில்குமார் டி.என்.63–எல்–4942 என்ற வாகனத்திலும் சிங்கம்புணரியிலிருந்து மணக்குடி நோக்கி தனது மகன் முன்னாலும், நான் பின்னாலும் இடதுபுறமாக சிலநீர்பட்டி விலக்கு அருகில் சென்ற போது திருப்பத்தூரிலிருந்து சிங்கம்புணரிக்கு வந்த டி.என்.38–எளம்–7548 என்ற வாகனத்தை ஓட்டி வந்தவர் சுமார் 3 மணிக்கு அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து முன்னால் சென்று கொண்டிருந்த தனது மகன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்று குறிப்பிட்டு புகார்கொடுத்துள்ளார்.

12(5). அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் யார் என்று கவனிப்பதற்காக விபத்தில் காயம்பட்ட தனது மகனை சிகிச்சைக்காக சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் ஆம்புலன்சில் யார் உடன் சென்றார் என்று தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். உண்மையில் அ.சா.1 சம்பவ இடத்தில் இருந்திருந்தால் தனது மகனுக்கு விபத்து ஏற்பட்டவுடன் ஆம்புலன்சில் தனது மகனுடன் சென்றிருப்பார். அல்லது தனது மகனுடன் ஒரு நபரை அனுப்பி வைத்திருந்திருபபார். எனவே அ.சா.1 சம்பவ இடத்தில் இருந்தாரா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(6). அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் இறந்தவர் தனக்கு நெருங்கிய உறவினர் என்றால் தங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றும் சம்பவ

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.04.21 17:29:59 +0530

இடத்தில் எனக்கு தெரிந்த நபர்கள் யாரும் அங்கு இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் விபத்து சம்பந்தமாக இறந்தவரின் அப்பாவுக்கு தகவல் சொன்னேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 சம்பவ இடத்தில் இல்லை என்பது தெரிய வருகிறது. அ.சா.1 சம்பவ இடத்தில் இருந்திருந்தால் இறந்த நபரின் அப்பாவான அ.சா.1 சம்பவ இடத்தில் இருந்தது குறித்து சாட்சியம் அளித்திருப்பார்.

12(7). அ.சா.1 சாட்சியத்தில் விசாரணையில் மேற்படி விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் கோவை மாவட்டதை சேர்ந்த சுரேஷ் என்ற விவரம் தெரிய வந்தது என்றும் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநரை தான் பதட்டத்தில் இருந்ததால் அவரை அடையாளம் காணவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது புகாரில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்தவர் பின்னால் பெயர் விலாசம் விசாரித்ததாக கூறியுள்ளார். உண்மையிலேயே அ.சா.1 சம்பவ இடத்தில் இருந்திருந்தால் தனது புகாரில் விபத்து ஏற்படுத்திய நபர் குறித்து புகாரில் குறிப்பிட்டு சொல்லியிருப்பார்.

12(8). அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தனது மகனுக்கு முன்னால் எந்த வாகனம் சென்று கொண்டிருந்தது என்றால் வாகனம் செல்லவில்லை. வளைவான பகுதி என்றும் எனது மகன் எதிரே வந்த வண்டி வந்தவுடன் ஓரமாக சென்று விட்டார் என்றும் நான் விபத்தை நேரடியாக பார்த்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். சம்பவத்தை கண்ணுற்ற அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் விபத்து சம்பந்தமாக இறந்தவரின் அப்பாவிற்கு தகவல் சொன்னேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.1 சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்பது தெரிய வருகிறது.

12(9). அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் நான் வேலை செய்யும் வங்கிக்கும், எனது மகன் வங்கிக்கும் இடையே 20 கிமீ தூரம் இருக்கும் என்று சாட்சியம் அளித்துள்ளார். சம்பவ சமயத்தில் அ.சா.1ம் அவரது மகனும் வேலை முடித்து ஒரே நேரத்தில் தான் சம்பவ இடத்திற்கு சென்றார்களா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.21 17:30:24 +0530

12(10) சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் மோதும் போது டப் என்று சத்தம் கேட்டது என்றும் சம்பவ இடத்தில் வைத்து வாகனத்தை ஓட்டிய நபரை பார்த்தேன் என்றும் தற்போது என்னால் அடையாளம் காட்ட முடியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை தான் 10 அடி தூரத்தில் பார்த்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12(11). அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவ இடத்திற்கு சத்தம் கேட்டு நான் செல்லும் போது பேருந்தில் இருந்த பயணிகள் அனைவரும் வந்து விட்டார்கள் என்றும் பக்கத்தில் இருந்தவர்களும் வந்து விட்டார்கள் என்றும் பக்கத்தில் இருந்தவர்களும் வந்து விட்டார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.2 சம்பவ சமயத்தில் சத்தம் கேட்டு சென்றுள்ளார் என்பது தெரிய வருகிறது.

12(12). அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் இறந்தவர் ஓட்டி வாகனத்திற்கு முன்னால் பின்னால் வாகனம் வந்ததா என்றால் இல்லை என்றும் விபத்திற்கு முன்பாக மேற்படி வாகனத்திற்கு முன்பு ஒரு பேருந்து கடந்து சென்றது என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.2 சம்பவ சமயத்தில் விபத்தை கண்ணுற்றிருக்க வாய்ப்பில்லை என்பது தெரிய வருகிறது.

12(13). அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவ இடத்தில் தனக்கு தெரிந்தவர்கள் யாரும் இல்லை என்றும் விபத்து சம்பந்தமாக இறந்தவரின் அப்பாவுக்கு தகவல் சொன்னேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் விபத்து கேள்விபட்டு தானும், தனது அப்பாவும் மருத்துவமனைக்கு சென்றோம் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் அ.சா.1 இல்லை என்பது தெரிய வருகிறது.

12(14). அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை நான் 10 அடி தூரத்தில் பார்த்தேன் என்றும் மேற்படி வாகனத்திற்கு முன்னால் ஆர்வி பஸ் போனது, வளைவான பகுதி என்பதால்

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.04.21 17:30:33 +0530

எதிர்புறம் வருகின்ற வாகனங்களை பார்க்கமுடியுமா என்றால் சைடு கண்ணாடி வழியாக பார்க்க முடியும் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 விபத்து ஏற்படுத்திய வாகனத்தை 10 அடி தூரத்தில் பார்த்ததாக கூறியுள்ள நிலையில் சம்பவ சமயத்தில் விபத்து ஏற்படுத்திய வாகன ஓட்நரை கண்ணுற்றிருக்க வாய்ப்பில்லை.

12(15). அ.சா.2 தனது முதல்விசாரணை சாட்சியத்தில் சம்பவ சமயத்தில் சீட் வேன் சிலநீர்பட்டி விலக்கு அமைந்திருக்கும் எதிரே உள்ள புளியமரத்திற்கு அருகில் காயம்பட்ட செந்தில்குமார் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது என்று சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அரசு தரப்பில் அரசு பேருந்தில் பயணம் செய்த பயணிகளையோ, வேனில் பயணம் செய்த நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து விசாரிக்காதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாக உள்ளது.

12(16). அ.சா.3 தனது சாட்சியத்தில் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரை நான் பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.3 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் டம் என்று சத்தம் கேட்டேன் என்றும் எனக்கு பின்னால் வந்து என்னை கிராஸ் செய்து வேன் முன் சென்றது என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 சென்ற வாகனத்தின் முன்னால் சென்ற வேன் மோதி விபத்தை ஏற்படுத்தியதாக கூறியுள்ள நிலையில் அ.சா.3 சம்பவத்தை கண்ணுற்றாரா? என்ற ஐயப்பாடு எழுகிறது. மேலும் அ.சா.3 சம்பவத்தை கண்ணுற்றிருந்தால் எதிரியை அடையாளப்படுத்தி சாட்சியம் அளித்திருப்பார். எனவே அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரி தான் வாகனத்தை வேகமாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்று அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை.

12(17). அ.சா.1 தனது சாட்சியத்தில் சம்பவ நேரத்தில் சம்பவ சாலையில் திருப்பத்தூர் – சிங்கம்புணரி சாலையில் வந்த வேன் அதிகவேமாக வந்து தனது மகன் செந்தில்குமார் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2 ம் சம்பவ

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.21 17:30:44 +0530

சமயத்தில், சம்பவ சாலையில் இருந்திருந்தால் எதிரி ஓட்டி வந்த வாகனமானது எவ்வளவு வேகமாகவும், எந்த வகையில் ஆபத்தாக வந்தது என்பது குறித்து தனது புகாரில் குறிப்பிட்டு கூறியிருப்பார். எனவே அ.சா.1 மற்றும் அ.சா.2 ம் சம்பவ இடத்தில் இருந்தாரா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(18). சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் விபத்து நடந்த பகுதி வளைவான சாலை என்றால் சரிதான் என்றும் போக்குவரத்து நெரிசலான பகுதி என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.6 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் என்ன வகையான அஜாக்கிரதை, யாருடைய அஜாக்கிரதை என்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். சம்பவம் நடந்த இடம் வளைவான பகுதி என்பதாலும், சாலையில் பேருந்து நிறுத்தம் இருப்பதாலும் வாகனங்கள் வேகமாக செல்வதற்கு வாய்ப்பில்லை என்ற எதிரி தரப்பு வாதம் வலுப்பெறுகிறது.

12(19). சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் 12.05.2013 ம் தேதி மாலை சுமார் 3 மணியளவில் சிங்கம்புணரிக்கு சென்று சாமான்கள் வாங்குவதற்காக சென்று கொண்டிருந்த போது சிலநீர்பட்டி பாலம் அருகே கிழக்கு – மேற்காக சிங்கம்புணரிக்கு வந்து கொண்டிருந்த போது திருப்பத்தூர் – சிங்கம்புணரி நோக்கி வந்த சீட் வேன் செந்தில்குமார் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12(20). அரசு தரப்பு வழக்கானது 12.05.2013 ம் தேதி மதியம் சுமார் 15.00 மணிக்கு செந்தில்குமார் என்பவர் TN–63–L–4942 Baja Pulsor இருசக்கர வாகனத்தில் சிங்கம்புணரியிலிருந்து திருப்பத்தூருக்கு கிழக்கு நோக்கி சிலநீர்பட்டி பாலம் அருகே சென்ற போது எதிரி மேற்கு நோக்கி TN–38–AM–7548 என்ற வேனை ஓட்டி வந்தார் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.1 தனது புகாரில் சம்பவ திசை குறித்து குறிப்பிட்டு கூறவில்லை.

12(21). சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.21 17:30:52 +0530

மாலை சுமார் 3 மணிக்கு சீட் வேன் சிலநீர்பட்டி விலக்கு அமைந்திருக்கும் எதிரே உள்ள புளியமரத்திற்கு அருகில் காயம்பட்ட செந்தில்குமார் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12(22). அ.த.சா.ஆ–5 மாதிரி வரைபடத்தை பரிசீலிக்கையில் சம்பவ இடமானது சிங்கம்புணரி – திருப்பத்தூர் மெயின் ரோடு என குறிப்பிடப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ–5 வரைபடத்தில் ரோட்டில் வளைவு இருப்பது குறித்து குறிப்பிட்டு காட்டவில்லை. மேலும் சம்பவ இடமானது சுப்பிரமணியன் நஞ்சை அருகே உள்ள மெயின்ரோட்டின் ஓரத்தில் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே சம்பவ இடம் குறித்து அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை.

12(23). அ.சா.1 தனது புகாரில் சிங்கம்புணரி அரசு மருத்துவமனையில் சென்று தனது மகனை பார்த்த போது தனது மகன் செந்தில்குமார் இறந்து விட்டதாக மருத்துவர் கூறியதாக கூறியுள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில் விபத்தில் காயம்பட்ட தனது மகனை மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது அவர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12(24). அ.சா.1 தனது சாட்சியத்தில் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க நான் மட்டும் தான் சென்றேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் விபத்து கேள்விபட்டு நானும், எனது அப்பாவும் மருத்துவமனைக்கு சென்றோம் என்றும் அங்கு போலீசார் வந்திருந்தார்கள் என்றும் மேற்படி புகாரை போலீசார் எழுதி வாங்கினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.த.சா.ஆ.1 புகாரை காவல் நிலையத்தில் பெறப்பட்டதா? மருத்துவமனையில் வைத்து பெறப்பட்டதா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(25). அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் புகாரை யார் எழுதினார் என்றால் நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதினார்கள் என்றும் மருத்துவமனைக்கு நான் சென்ற போது தன்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் இரண்டு நாட்கள் கழித்து தான் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது அப்போது கையெழுத்து வாங்கினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.21 17:31:01 +0530

அ.த.சா.ஆ.6 பிரேத விசாரணை அறிக்கையை பரிசீலிக்கையில் 13.05.2013 ம் தேதி பகல் 8.00 மணிக்கு பிரேத விசாரணை செய்ததாக காணப்படுகிறது. எனவே புகாரானது சம்பவத்திற்கு பின்னீடு பின்யோசனை செய்து இறந்தவருக்கு இழப்பீடு பெறுவதற்காக வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்ற எதிரி தரப்பு வாதம் வலுப்பெறுகிறது.

12(26). அ.சா.1 தனது சாட்சியத்தில் அன்றையதினம் மாலை 5 மணியளவில் எஸ்.வி.மங்களம் காவல்நிலையம் சென்று புகர் அளித்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் விபத்தை கேள்விபட்டு தானும், தனது அப்பாவும் மருத்துவமனைக்கு சென்றோம் என்றும் அங்கு வந்த போலீசார் தன்னிடமும் அப்பாவிடமும் புகாரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றும் மேற்படி புகாரை போலீசார் எழுதினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12(27). இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அ.சா.5 ஆய்வாளர் தனது சாட்சியத்தில் அ.சா.1 நிலையம் ஆஜராகி புகார் மனு கொடுத்ததை நிலைய குற்ற எண்:57/2013 இதச பிரிவு 304A–ன் கீழ் அ.த.சா.ஆ–3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.த.சா.ஆ.1 புகார்மனுவினை பரிசீலிக்கையில் மேற்படி புகார்மனுவானது மனுவில் வடிவில் அமைந்துள்ளது. அ.சா.4 தனது சாட்சியத்தில் கூறியுள்ளது போல் அ.த.சா.ஆ–1 புகார்மனுவினை போலீசார் எழுதியிருந்தால் வாக்குமூல வடிவில் எழுதியிருப்பார்கள். எனவே புகார்மனு உண்மைதன்மையுடையதா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(28). சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 சம்பவதன்று போலீசார் சம்பவ இடத்திற்கு 5 நிமிடத்தில் வந்து விட்டதாக கூறியுள்ள நிலையில் புகாரானது சம்பவத்தன்று மாலை 17 மணிக்கு காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது. எனவே புகாரானது சம்பவத்திற்கு பின்னீடு அ.சா.1 ஆல் பின்யோசனை செய்து கொடுக்கப்பட்டுள்ளதா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(29). பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 தனது குறுக்கு விசாரணை

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.21 17:31:11 +0530

சாட்சியத்தில் சம்பவதன்று மாலை 6 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் பெற்றார்கள் என்றும் சம்பவ இடத்தில் வைத்து போலீசார் வரைபடம் தயார் செய்தார்களா என்றால் அது பற்றி தெரியாது என்றும் எழுதி இருந்த பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே பார்வை மகஜர் ஆவணம் சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதா? காவல்நிலையத்தில் தயார் செய்யப்பட்டதா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

12(30). அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவத்தின் போது தனது மகன் ஹெல்மெட் அணிந்திருந்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எனது மகனின் ரத்தம் சாலையில் சிந்தி கிடந்ததை நான் பார்த்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12(31). அ.த.சா.ஆ–4 பார்வை மகஜர் ஆவணத்தை பரிசீலிக்கையில் ரத்தம் மற்றும் உடைந்த ஹெல்மெட் இருந்தது குறித்த விவரங்கள் எழுதப்படவில்லை. அ.த.சா.ஆ.7 மாதிரி வரைபடத்தை பரிசீலிக்கையில் ரத்தம் மற்றும் ஹெல்மெட் விழுந்த இடம் குறித்து குறிப்பிட்டு காட்டவில்லை. விபத்தில் இறந்த நபர் ஹெல்மெட் அணிந்திருந்தால் விபத்தின் போது விபத்தில் இறந்த நபர் தூக்கி எறியப்பட்டதாக கூறுகின்ற நிலையில் அவரது ஹெல்மெட் உடைந்திருக்க வாய்ப்புள்ளது. இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி தயார் செய்த அ.த.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.த.சா.ஆ–5 மாதிரி வரைபடத்தில் ரத்தம் மற்றும் உடைந்த ஹெல்மெட் உதிரி பாகங்களை குறிப்பிட்டு காட்டாதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாக உள்ளது.

12(32). அ.சா.2 தனது குறுக்குவிசாரணை சாட்சியத்தில் சிலநீர் விலக்கு அருகே பஸ் ஸ்டாப் கிடையாது என்றும் அதன் அருகில் செங்கல் சேம்பர் உள்ளது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். அத.சா.ஆ–5 மாதிரி வரைபடத்தை பரிசீலிக்கையில் சிலநீர்பட்டி பஸ் ஸ்டாப் குறிப்பிடப்பட்டுள்ளது, செங்கல் சேம்பர் குறிப்பிடவில்லை என்பதும் தெரிய வருகிறது. எனவே சம்பவ இடம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.21 17:31:18 +0530

12(33). அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து தனது மகன் விபத்தில் எந்த இடத்திலிருந்து எந்த இடத்திற்கு தூக்கி வீசப்பட்டார் என்பது குறித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. அ.த.சா.ஆ.5 மாதிரி வரைபடத்தை பரிசீலிக்கையில் சம்பவ இடமானது சிங்கம்புணரி – திருப்பத்தூர் ரோட்டில் சுப்பிரமணியன் நஞ்சை நிலத்திற்கு ரோட்டின் ஓரம் என காண்பிக்கப்பட்டுள்ளது. உண்மையிலேயே அ.சா.1 சம்பவத்தை கண்ணுற்றிருந்தால் எந்த இடத்தில் விபத்து ஏற்பட்டு தனது மகன் செந்தில்குமார் என்பவர் எந்த பக்கம் தூக்கி வீசப்பட்டார் என்பது குறித்து சாட்சியம் அளித்திருப்பார்.

12(34). அ.சா.1 தனது குறுக்குவிசாரணை சாட்சியத்தில் வழக்கு சம்பந்தப்பட்ட வாகனத்தை சம்பவ இடத்தில் பார்த்தேன் என்றும் சம்பவ இடத்தில் வாகனம் நின்றது என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 சம்பவ இடத்தில் விபத்து ஏற்படுத்திய வாகனம் நின்றதாக கூறியுள்ள நிலையில் மேற்படி வாகனத்தை சம்பவ இடத்திலிருந்து எடுத்து வந்தது யார் என்பது குறித்து அரசு தரப்பில் விசாரணை செய்யாதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாக உள்ளது.

12(35). இவ்வழக்கில் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களான அ.த.சா.ஆ.8 ஆன TN–38–AM–7548 என்ற வேனையும், அ.தசா.ஆ.9 ஆன TN–63–L–4942 என்ற இருசக்கர வாகனத்தின் ஆய்வறிக்கைகளை பரிசீலிக்கையில் வேனை 14.05.2013ம் தேதியும், இருசக்கர வாகனத்தை 11.05.2013ம் தேதியும் சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்ததாக காணப்படுகிறது. பொதுவாக சம்பவ இடத்திற்கு வந்த வாகனங்களை ஆய்வு செய்தால் தான் விபத்திற்கான காரணம் குறித்து முழுமையாக கண்டறிய இயலும். சம்பவ இடத்தில் வைத்து மோட்டார் வாகன ஆய்வாளர் விபத்தில் ஈடுபட்ட வாகனங்களை ஆய்வு செய்யாதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கின்றதாக உள்ளது. மேலும் காலதாமதமாக விபத்தில் ஈடுபட்ட வாகனங்களை ஆய்வு செய்துள்ளது தெரிய வருவதால் அரசு தரப்பில் சொல்லியவாறு வாகன சேதாரங்கள் ஏற்பட்டதா? என்ற ஐயப்பாடு எழுகிறது.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.21 17:31:25 +0530

12(36). சம்பவமானது 12.05.2013 அன்று மாலை 3.00 மணிக்கு நடைபெற்றுள்ளது. ஆனால் அ.த.சா.ஆ–3 முதல் தகவல் அறிக்கையானது 12.05.2013 அன்று 17.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்து ஏற்பட்டவுடன் சம்பவ இடத்திற்கு காவலர்கள் சென்றுள்ள நிலையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 13.05.2013 ம் தேதி காலதாமதமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததற்கான காரணம் குறித்து விளக்கம் அளிக்காதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கின்றதாக உள்ளது.

12(37). மேலும் இவ்வழக்கில் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக அ.சா.1 முதல் அ.சா.3 யை தவிர வேறு சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மேலும் சம்பவத்தை கண்ணுற்றதாக அரசு தரப்பில் சொல்லப்படும் அ.சா.1 முதல் அசா.3 ன் சாட்சிகளின் சாட்சியங்கள் விபத்து ஏற்படுத்திய எதிரி குறித்து அடையாளப்படுத்தி சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

12(38).இறந்துபோன செந்தில்குமாருக்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் இறப்பானது அவருக்கு ஏற்பட்ட பலதரப்பட்ட காயத்தினால் ஏற்பட்டிருக்கலாம் என்று பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கியுள்ளார். அ.த.சா.ஆ.7 பிரேத பரிசோதனை அறிக்கையின் மூலம் செந்தில்குமார் இறந்துள்ள விபரம் தெரிய வருகிறது. சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 இறந்த நபரான செந்தில்குமார் என்பவருக்கு வலது காலில் முறிவு ஏற்பட்டதாக கூறியுள்ளார். எனினும் எதிரியின் கவனகுறைவினால் விபத்து ஏற்பட்டது என்று சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாக நிரூபணம் செய்யப்படாத நிலையில், பிரேத பரிசோதனை அறிக்கை அரசு தரப்பு வழக்கிற்கு வலுசேர்க்கும் வகையில் அமையவில்லை.

12(39).விபத்து ஏற்பட்டுவிட்டது என்பதாலும், ஒரு உயிரிழப்பு நேர்ந்துவிட்டது என்பதாலும், எதிரியின் அசட்டையான அல்லது கவனக்குறைவான செயலால் தான் விபத்து நேரிட்டது என்று அனுமானம் கொள்ள இயலாது. எதிரியின் செய்கைக்கும், விபத்திற்கும் நேரடி தொடர்பு இருக்க வேண்டும். எதிரி கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் TN 38–

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.04.21 17:31:31 +0530

AM–7548 என்ற பதிவு எண் கொண்ட வேனை ஓட்டி வந்து TN–63–L–4942 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த செந்தில்குமார் மீது மோதியதால் அவருக்கு இறப்பு ஏற்பட்டதாக சாட்சிய மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்திருக்க வேண்டும். கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 முதல் அ.சா.3 ன் சாட்சிகளின் சாட்சியங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு காணப்படுகிறது அவர்களது சாட்சியம் நம்பகத் தன்மையுடன் காணப்படாத நிலையிலும், எதிரி தான் விபத்தை ஏற்படுத்தினார் என்று எதிரியை அடையாளப்படுத்தி சாட்சியம் அளிக்காத நிலையிலும், மேற்படி விபத்தில் எதிரியின் கவனக்குறைவால் தான் செந்தில்குமார் என்பவர் மீது வாகனம் மோதி இறந்து விட்டார் என்ற எதிரியின் குற்ற செயல் குறித்து அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் அரசுதரப்பு நிருபனம் செய்யாத நிலையில் விபத்தானது செந்தில்குமார் என்பவரின் கவனக் குறைவினால் கூட விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்ற ஐயப்பாடு எழுந்துள்ள நிலையில் மேற்படி ஐயப்பாடுகளின் பலனை பெறுவதற்கு எதிரிக்கு அருகதை உண்டு. இந்நிலையில் அரசு தரப்பு எதிரிக்கு எதிரான 304 எ–யின் கீழான குற்றச்சாட்டை ஐயப்பாடிண்றி நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இறுதியாக**

13.எதிரிக்கெதிரான குற்றத்தை அரசு தரப்பு நிரூபணம் செய்ய தவறிவிட்டதென முடிவு செய்து, எதிரி இதச பிரிவு 304(A)ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி கு.வி.மு.ச பிரிவு 437A–ன் கீழ் எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீடு காலத்திற்கு பின் தானாக ரத்தாகும் என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

14.இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் சான்று பொருட்கள் குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.04.21 17:31:38 +0530

நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21ம் நாள் செவ்வாய்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவை அறிய பகரப்பட்டது.

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.04.21 17:31:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.

**அரசுதரப்பு சாட்சிகள்:**

| | |
|---|---|
| அ.த.சா.1 | சேதுராமன் / புகார்தாரர்/சம்பவத்தை கண்ணுற்ற நபர் |
| அ.த.சா.2 | சண்முகம் / சம்பவத்தை கண்ணுற்ற நபர் |
| அ.த.சா.3 | பெரியசாமி / சம்பவத்தை கேள்விபட்ட நபர் |
| அ.த.சா.4 | கார்த்திகேயன் / பார்வை மகஜர் சாட்சி |
| அ.த.சா.5 | முகமது தாரிக்குல் அமீன் / ஆய்வாளர் |
| அ.த.சா.6 | சசிகலா / காவல் ஆய்வாளர் |

**அரசுத் தரப்பு சான்றாவணம்:**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 22.02.2023 | அ.சா.1 | புகார்மனு |
| அ.த.சா.ஆ.2 25.06.2025 | அ.சா.4 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.4ன் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.3 11.02.2025 | அ.சா.5 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.4 26.03.2026 | அ.சா.6 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.5 26.03.2026 | அ.சா.6 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.6 26.03.2026 | அ.சா.6 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.த.சா.ஆ.7 26.03.2026 | அ.சா.6 | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.த.சா.ஆ.8 26.03.2026 | அ.சா.6 | TN-38-AM-7548 மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.9<br>26.03.2026 | அ.சா.6 | TN-63-L-4942 மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

<u>**அரசுத் தரப்பு சான்றுபொருட்கள்**</u> : இல்லை

**எதிர் தரப்பு சாட்சி, சான்று பொருட்கள் மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.04.21 17:31:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.

**குறிப்பு**

1) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.
2) இவ்வழக்கு விசாரணையின் போது எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் அழைத்து விசாரணை செய்யப்படவில்லை.
3) இவ்வழக்கின் முடிவு குறித்து சிறு குறிப்பு காவல் துறையினருக்கு வழங்கப்பட்டது.

/ உண்மை நகல் /

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.04.21 17:31:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.